# எண்ணாகமம்

20 வயதுக்கு மேற்பட்டவர்கள் தகுதியானவர்கள்.கானான் தேசத்திற்குள் சென்றவுடன்,அங்குள்ளவர்களுடன் யுத்தம் செய்வதற்கு 20 வயதுடையவர்களும் அதற்கு மேற்பட்டவர்களும் எவ்வளவு என்று தொகை பார்க்கும்படி மோசே கட்டளையிடப்பட்டார்.இந்த செயற்றிட்டத்திற்கு உதவியாக ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார்கள். 12 கோத்திரத்திலிருந்தும் யுத்தத் திற்காகத் தெரிவு செய்யப்பட்டோர் எண்ணிக்கை 603,550 ஆவர். முழவதுமாக ஏறக்குறைய 2 மில்லியன் தொகை எனக் கணக்கிடப்பட்டது.நாற்பது ஆண்டுகள் அலைந்து திரிந்த வாழ்கை வரலாற்றை கூறுகின்ற ஆகமம்.

**கால அட்டவனை**

| | |
|---|---|
| **யாத்திரை, நியாயப்பிரமாணம் கொடுக் கப்படல் .** | **கி.மு. 1446** |
| **காதேஸ்-பார்னா, வனாந்தர அலைச்சல் ஆரம்பம்** | **கி.மு. 1443** |
| **இஸ்ரவேலர்கள் கானானுக்குள் நுழைதல்.** | **கி.மு.1406** |

**பின்னணி**

நியாயப்பிரமாணத்தை சீனாய் மலையில் பெற்றுக் கொண்டார்கள் (யாத்திராகமம்—லேவி யராகமம் ), அதன்பின்பு கானான் தேசத்திற்குத் திரும்புவதற்கு ஆயத்தமானார்கள். (1–10). கானான் எல்லைகளுக்கான சிறிய பிரயாணங்களை முடித்தபின்பு எப்படியோ அவர்கள் கர்த்தருக்கு எதிராகக் கிளம்பினார்கள். (13–14) அதனால் வனாந்தரத்தில் 40 வருடம் அலைச்சலைப் பெற்றுக் கொண்டார்கள்.அதிகாரம் 15–36இல் பல நிகழ்வுகள் இந்த அலைச்சலின் காலப்பகுதியில் பதியப்பட்டுள்ளன. இவைகள் யாவும் ஆவிக்குரிய நிலமைக்கும் சமய எதிர்புக் கும் இடையில் தடுமாறியதைக் காண்பிக்கின்றது.வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தைப் பார்த்த படியே கூடாரமிட்டு இருப்பதுடன் புத்தகம் முடிவிற்கு வருகின்றது.

**எழுதியவர்;-** மோசே

மோசே தான் இந்தப் புத்தகத்தை எழுதினார் என்பதற்கான குறிப்புகள் இந்த புத்தகத்திலேயே காணப்படுகின்றன. (1:1; 33:2). மோசேயினால் இதன் விபரங்களும் கண்கண்ட சாட்சிகளும் விபரமாகக் கொடுக்கப்படுகின்றன.

**காலமும் இடமும்.**

கி.மு1446இல் யாத்திராகாமச் சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும்.புத்தகம் கி.மு. 1406இல் தான் எழுதப்பட்டது.மோசே நாளாந்தம் அலைச்சல் பிரயாணத்தின் பதிவுகளைப் நாளேட்டில் பதிவு செய்திருந்தார், அதனால் 40 வருட காலப்பதிவுகளும் 1406இல் இறுதி வடிவமாகப் பதிவு செய்யப் பட்டுள்ளது.

**நோக்கம்**

• தன்னுடைய மக்கள் கீழ்ப்படியாமால் இருந்தபோது கலைக்கப்பட்டார்கள் என்பதைக் காண்பிப்பதற்காகவாகும்.

• சிவப்பான ஒரு கிடாரியை யும் வெண்கலச்சர்ப்பத்தையும் அடையாளப்படுத்தி இயேசுக் கிறிஸ்த்துவின் பலி நிழலாட்டமாக கூறப்பட்டுள்ளது. (19: 9).

• கர்த்தருடைய இயல்பான குணத்தை தொடர்ந்து வெளிப்படுத்திக் கொண்டிருபதற்காக

» அவருடைய உடன்படிக்கையை பாதுகாக்கும் குணம்.

» கோபத்திற்கும் கிருபைக்குமிடையே தளம்பலில்லாத தன்மை

**சுருக்கம்**

1. இஸ்ரவேலர்கள் சீனாய் மலையில்: Preparationஆயத்தப்படல் (1:1–10:10)
2. ஜனங்களைத் தொகையிடல் . (1)
3. ஆசரிப்புக் கூடாரத்திற்கு எதிராகச் சுற்றிலும் பாளயமிறங்குதல் (2)
4. லேவியர்கள் தொகையிடப்பட்டு, கடமைகள் கொடுக்கப்படல் (3–4)
5. பரிசுத்தத்தின் தன்மைகள் (5)
6. நசரேய விரதம். (6)
7. இஸ்ரவேல் தலைவர்களிடமிருந்து ஆசாரிப்புக் கூடாரத்திற்கான காணிக்கைகள். (7)
8. லேவியர்களுக்கான பிரதிஷ்டை (8)
9. அக்கினி ஸ்தம்பமும், சௌளி எக்காளமும். (9:1–10:10)
10. சீனாயிலிருந்து காதேஸ்வரை : விரக்தியடைதல் (10:11–20:13)
11. சீனாய் மலையிலிருந்து வெளியேறல். (10:11-36)
12. முறைப்பாடுகளும் தீர்வுகளும்.(11)
13. மீரியாமும், ஆரோனும் மோசேக்கு எதிராகப் பேசுதல். (12)
14. காதேஸ்- பர்னாவில் முரண்படுதல். (13–14)
15. மேலதிகமான நியாயப்பிரமாணம். (15)
16. அபிராம், தாத்தான், கோரா என்பவர்களின் முரண்பாடுகள். (16)
17. ஆரோனுடைய கோல் துளிர் விடல். (17)
18. லேவியர்களின் கடமைகள். (18)
19. சிவப்பான ஒரு கிடாரியின் சாம்பலால் பரிசுத்தப்படுத்தல். (19)

20. மோசே கன்மலையை அடித்தல். (20:1-13)
21. காதேசிலிருந்து மோவாப் வரை : எதிர்பார்ப்பு (20:14–36:13)
22. இஸ்ரவேலர்களுக்கான பாதையை ஏதோம் மறுத்தல். (20:14-21)
23. ஆரோனின் மரணம். (20:22-29)
24. வெண்கலச் சர்ப்பம். (21:1-9)
25. சீகோனையும், ஓக்கையும் இஸ்ரவேல் வெற்றி கொள்ளல். (21:10-35)
26. பாலாக்கும் பாலாமும். (22–24)
27. இஸ்ரவேலர்கள் மோவாப்பியர்களால் வெற்றி கொள்ளப்படல். (25)
28. இரண்டாம் தடவையாக ஜனங்கள் தொகையிடப்படல். (26)
29. மோசேயை யோசுவா வெற்றி கொள்ளல். (27)
30. ஆராதனைக்கும், பொருத்தனைகளுக்குமான ஒழுங்குவிதிகள். (28–29)
31. பொருத்தனைக்கான ஒழுங்கு விதிகள். (30)
32. மீதியானியர்களை இஸ்ரவேல் வெற்றி கொள்ளல். (31)
33. கோத்திரங்கள் குடியமர்த்தப்படல். (32)
34. வனாந்தரப் பிரயாணத்தின் மீள்பார்வை (33)
35. கானானின் குடியமர்வு விபரிக்கப்படல். (34–36)

**இஸ்ரவேலர்கள் சீனாய் மலையில் (1:1–10:10)**

**ஆயத்தப்படுதல்.(1:1–10:10)**

**1:1-46. முதலாவது கணக்கெடுப்பு; -20 வயதுக்கு மேற்பட்டவர்கள் தகுதியானவர்கள்.**

கானான் தேசத்திற்குள் சென்றவுடன் ,அங்குள்ளவர்களுடன் யுத்தம்செய்வதற்கு 20 வயது டையவர்களும் அதற்கு மேற்பட்டவர்களும் எவ்வளவு என்று தொகை பார்க்கும்படி மோசே கட்டளையிடப் பட்டார்.இந்த செயற்றிட்டத்திற்கு உதவியாக ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டார்கள். 12 கோத்திரத்திலிருந்தும் யுத்தத்திற்காகத் தெரிவு செய் யப்பட்டோர் எண்ணிக்கை 603,550 ஆவர். முழவதுமாக ஏறக்குறைய 2 மில்லியன் தொகை எனக் கணக்கிடப்பட்டது.

**1:47-54** .லேவியர்கள் மற்றக் கோத்திரங்களுடன் சேர்த்து எண்ணப்படவில்லை, காரணம் அவர்கள்,ஆசாரிப்புக் கூடாரத்திற்குப் பொறுப்பானவர்கள், அவர்கள் யுத்த வீரர்களல்ல

**2:1-34 .இரண்டு மில்லியன் மக்களுக்கு கூடாரம்.** கர்த்தர் ஒழுங்கமைப்பின் பிரகாரம் முகாம் அமைக்கும்படி விரும்பினார்.ஆசாரிப்புக் கூடாரத்தைமையப்படுத்தி ஒவ்வொரு கோத்திரத்திற்கும் உரிய இடம் ஒதுக்கப்பட்டது.. ஒவ்வொரு கோத்திரத்திற்கும் அவர்களை அடையாளம் காணும் படியாக கொடி அமைக்கப்பட்டது. (2:2). தொகை பார்ப்பதற்கு ஒவ்வொரு கோத்திரத்திலிமிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களே அந்தக் கோத்திரங்களை வழிநடத்துவதற்கும் நியமிக்கப்பட்டார்கள். முகாமைவிட்டு வெளியேறும்போது எவ்வாறாக ஒவ்வொரு கோத்திரமும் புறப்பட வேண்டும் என்ற ஒழுங்குகளும் திட்மிடப்பட்டன. (2:9, 16, 24, 31)

**3:1-4 ;அவருடைய இரண்டுபிள்ளைகள் ஜிவிக்கிறார்கள்.** கீழ்ப்படியாமையின் காரணமாக அபியூவும், நாதாப்பும் மரித்தார்கள் (லேவி 10:1-7) ஆரோனுக்கு எலியேசர், இத்தாமர் என்னும் இரண்டுபிள்ளைகள் ஆசாரிய ஊழியத்தில் உதவிசெய்வதற்கு இருந்தார்கள்.மோசே தனது குடிம்பத்தை பற்றி குறிப்பிடவில்லை,ஊழியத்தில் பதவியும் குடுக்கவில்லை,தனக்கேன்று உடமையும் சேர்கவில்லை.மோசே அர்ப்பணிப்பு,தியாகம் நிறைந்த ஊழியக்காறன்.

**3:5-13: லேவியர்கள் என்னுடையவர்கள்,** அவர்கள் எனக்கு சேவை செய்வார்கள் ஏனெனில் எகிப்திலிருந்து புறப்பட்டபோது இஸ்ரவேலர்களை விடுதலையாக்கினார், அவர்களுடைய முதற்பேறானவர்கள் கர்த்தருக்கு உரியவர்கள். (யாத். 13:1-2, 11-16; 22:29).இப்போது லேவி கோத்திரத்தின் முதற்பேறான ஆண்கள் யாவரும் எல்லாக் கோத்திரத்தின் முதற்பேறானவர்கள் எனறு ஏற்றுக் கொண்டு ஆரோனுக்கு உதவியாளர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

**3:14-39 " இப்போது லேவியர்கள் தொகையிடப்படலாம்"**.லேவியர்களை தொகையிடும்படி கர்த்தர் மோசேய்க்கு கட்டளையிட்டார். அவர்கள் லேவியின் மூன்று பிள்ளைகளின் படி மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டார்கள்.அவர்களின் நாமங்களாவன கெர்சோன், கோகாத், மெராரி என்பவைகளாகும் மோசேயும் **(ஆரோனும் கோகாத் பரம்பரையினராவர். யாத். 6:16-20;)** லேவி கோத்திரத்தின் தொகை பார்த்தல் வித்தியாசமானது, லேவியின் ஆண்பிள்ளைகள் ஒரு மாதமும் அதற்கு மேற்பட்வர்களும் தொகையிடப்பட்டார்கள். **கோசொன்** குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், ஆசாரிப்புக் கூடாரத்தின் மேற்குப் பக்கமாக குடியமர்த்தப்பட்டார்கள். இவர்கள் திரைச்சீலைகளுக்கும், மறைப்புகளுக்கும் பொறுப்பாக இருப்பார்கள். **கோகத்** குடும்பத்தவர் கள் தெற்குப் பக்கமாக குடியமர்த்தப்பட்டார்கள், இவர்கள் ஆசாரிப்புக் கூடாரத்தில் காணப்படும் பொருட்களுக்குப் பொறுப்பாக இருப்பார்கள்–உடன்படிக்கைப்பெட்டி, மேசை, குத்துவிளக்கு, பலிபீ டம், மற்றும் பாத்திரங்கள் என்பனவாகும். **மெராரி** குடும்பத்தவர்கள் வடக்குப்பக்கமாக குடிய மர்த்தப்பட்டார்கள், இவர்கள் ஆசாரிப்புக் கூடாரத்தின் யன்னல், கதவுபோன்றவற்றிற்கும் வெளிப்பிரகாரத்திற்கும் பொறுப்பாயிருப்பார்கள். மோசே,ஆரோன், எலியேசர், இத்தாமர் ஆகி யோர் ஆசாரிப்புக் கூடாரத்திற்கு கிழக்குப்பக்கமாக தங்கள் கூடாரத்தையும் வாசல்களையும் அமைத்தார்கள், அவர்களின் ஒருமாதமும், அதற்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை **22,000** ஆகும்.

3:40-51 **மீட்பு**;- இப்போது இஸ்ரவேலர் மக்களின் முதற் பிறந்த ஆண்பிள்ளைகள் ஒருமாதமும் அதற்கு மேற்பட்டவர்களையும் தொகை பார்த்தான் லேவியர்களின் முழுத் தொகையிலும் 273 பேர் அதிகமாக உள்ளனர். (3:5-13 ) இந்த மேலதிகமான 273 பேரும் முதற்பிறந்தவர்கள் ஐந்துசேக்கல் வெள்ளி கொடுத்து மீட்கப்பட்டவர்களாவர்.

**4:1-49 லேவியர்களின் இரண்டாம் தொகை மதிப்பீடு**;- 30-50 வயதுக்குட்பட்ட எல்லா ஆண்க ளும் இரண்டாம் தொகை மதிப்பீட்டிற்குட்பட்டார்கள். இவர்கள் வயதின் அடப்படையில் ஆசாரிப்புக் கூடாரப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள், இவர்களின் முழுத் தொகையும் 8,580.பேராவர்.ஆசரிப்புக் கூடாரத்திலே கோகாத் புத்திரரின் பணிவிடை மகாபரிசுத்தமான வைகளுக்குரியது,இவர்கள் ஆசாரிப்புக் கூடாரத்தின் தளபாடங்களுக்கும் திரைச்சீலை அலங் காரங்களுக்கும் பொறுப்பானவர்கள். விஷேசமாக ஆசாரிப்புக் கூடாரம் கொண்டு செல்லப்

படும்போது அதன் தளபாடங்கள்யாவும் பக்குவப்படுத்திக் கொண்டு செல்லுதல் இவர்களின் பொறுப்பாகும்.இந்தப் பணிகள் யாவையும் எலியேசர் மேற்பார்வை செய்து **கொள்ளுவார்.**(4:16) **கோர்சேனியர்களுடையதும்**, மொராரியர்களுடையதுமான கடமைகள் மீண்டும் வலியுறுத் தப்பட்டுள்ளது.இத்தாமர் இந்தவேலைகள் யாவற்றையும் மேற்பார்வை செய்வதற்காக நியமிக் கப்பட்டார்.

**5:1-4 .அசுத்தப்பட்டவர்கள் புறம்பாக்கப்படல் வேண்டும்**.இஸ்ரவேர்களுடன் கர்த்தர் இருப்பதால்,யார்யாரெல்லாம் நோயினால் அல்லது மரணவீட்டினால் அசுத்தமடைந்து ள்ளார்ளோ, அவர்கள் எல்லாரும் முகாம் துப்பரவாக்கும் வரை வெளியேற்றப்படல் வேண்டும்.

**5:5-10 பாவத்தை அறிக்கையிடுதலும்,அபராதமும் 20% அதிகமும் செலுத்தலும்**. லேவியராகமத்தின் **64 : 1-7** இல் கூறப்பட்டது போல் களவு அறிக்கைசெய்ப்படல் வேண்டும், களவு எடுக்கப்பட்ட பொருள் திரும்ப ஒப்படைக்கப்படல் வேண்டும்,அத்துடன் நஸ்ட ஈடாக மேலதிகமாகப் பெறுமதியின் **20%மும்** செலுத்துதல் வேண்டும்.களவு கொடுத்தவர் மரித்தி ருந்தால், அவருக்குரிய பொருள் ஆசாரியனுக்குரியதாகும்.

**5:11-31 வெகுளியா அல்லது பாவியா? பரிசோதனை அதனைச் வெளிக்காட்டும்.**

தன்னுடைய மனைவி பாவம் செய்துவிட்டாள் என்று ஒரு மனிதன் சந்தேகப்பட்டால், ஆசாரியன் பரிசுத்த தண்ணீரையும் புழுதியையும் கலந்து அவளுக்குக் குடிக்கக் கொடுப் பான்,இந்தப்பானத்தைக் குடித்தபிற்பாடு, அவளது உடம்பில் ஏற்படும் மாற்றம், அவள் வெகு ளியா அல்லது பாவியா என்பதை வெளிக்காட்டும். இது கர்த்தருடைய நியாத்தீர்ப்பை வெளி ப்படுத்தும், அவள் பாவம் செய்யாவிடல் அவளது உடம்பில் நோய்கள் எற்பட மாட்டாது.

**6:1-21 .நசரேயப்பாதை**;-குறித்த காலத்திற்கு குறிப்பிட் பொருத்தனை செய்தவர்கள் நசரேய விரதமிருப்போர் எனப்படுவர். இந்தப் பொருத்தனைக் காலங்களில் எதுவித மதுபானமும் அருந்துதல் கூடாது, தன்னுடைய தலைமயிரை வெட்டுதல் கூடாது, எதுவித பிணத்தையும் தொடக்கூடாது என்பன கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். இவருடைய தலை மயிரைவெட்டி, அதனை நெருப்பில் எரித்தபிற்பாடு அவர் சாதாரண வாழ்க்கையை மேற் கொள்ளலாம்.

**6:22-27 ஆசாரியர்களிடமிருந்து ஜனங்களுக்கான விஷேசித்த ஆசீர்வாதம்**. கர்த்தர் மோசேக்கு விஷேசித்த ஆசீர்வாதங்களுக்கான வார்த்தைகளைக் கொடுத்தார்.அவர்களின் பாதுகாப்புக்காவும்,கிருபைக்காகவும்,சமாதானத்திற்காகவும், இவ்வாறாக ஆசாரியர்கள் ஜனங் களை ஆசீர்வதிப்பார்களாக.

**7:1-88 ஆசாரிப்புக் கூடாரத்திற்கான கொடைகள். தலைவர்களுக்கான மரபுரிமைகள்** .மோசே,ஆசாரிப்புக் கூடாரத்தை நிறுத்தி முடித்த அந்த நாளில், 12கோத்திரங்களின் தலை வர்களும் முதலாவது கணக்கெடுப்புக்கு உதவி செய்தார்கள். (1:5-15), அந்த நாளில் காணி க்கைகளைக் கொண்டுவந்தார்கள். இது யாத்திரகாமத்திலும் கூறப்பட்டுள்ளது. 40:17;. ஒவ்வொரு தலைவர்களும் காளைகளைக் கொண்டுவந்தார்கள் அவை மொத்தமாக 12 அகும். தங்கள் காணிக்கையாக, ஆறு கூண்டு வண்டில்களையும், பன்னிரண்டு மாடுகளையும், இரண்டிரண்டு பிரபுக்களுக்கு ஒவ்வொருவண்டிலும், ஒவ்வொருபிரபுக்கு ஒவ்வொருமாடுமாக, கர்த்தருக்குச் செலுத்த வாசஸ்தலத்திற்கு முன்பாகக்கொண்டுவந்தார்கள். (7;3).இரண்டு வண்டில்கள் கோசொ

னியர்களுக்கு,ஆசாரிப்புக் கூடாரத்தின் திரைச் சீலைகளகைளையும், மூடுதிரைகளையும் கொண்டு செல்வதற்கும், மொரோரியர்களுக்கு நான்கு வண்டில்களும், எட்டு மாடுகளும் கொடுக்கப்பட்டன, இவர்கள் ஆசாரிப்புக்கூடாரத்தின் பலகைகளைக் கொண்டு செல்வதற்காக கோகாத்தின் புத்திரர் தங்கள் தோள்களில் ஆசாரிப்புக் கூடாரத்தின் தளபாடங்கள் யாவற்றையும் கொண்டு செல்வார்கள். (4:15; 7:9), இவர்களுக்கு வண்டில்களோ காளைகளோ கொடுக்கப் படவில்லை.தகன பலி 12 நாட்களுக்குக் கொண்டாடப்படும். (7:10-83). ஒவ்வொரு நாளும் கோகாத்திரத் தலைவர்களால் கொடுக்கப்பட்ட பரிசில்கள் குறிப்பிடத்தக்கவையாகும். ஒவ்வொருகொடையையும் கர்த்தர் பெறுமதிப்படுத்தினார். பலிபீடம் அபிஷேகம் பண்ணப்பட்ட போது, இஸ்ரவேல் பிரபுக்களால் செய்யப்பட்ட பிரதிஷ்டையாவது: வெள்ளித் தாலங்கள் பன்னிரண்டு , வெள்ளிக் கலங்கள் பன்னிரண்டு, பொன்தூபகரண்டிகள்பன்னிரண்டு. ஒவ்வொரு வெள்ளித்தாலம் நூற்று முப்பது சேக்கல்நிறையும், ஒவ்வொரு கலசமும் எழுபது சேக்கல் நிறையுமாக, இந்தப்பாத்திரங்களின் வெள்ளியெல்லாம் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கின்படி **இரண்டாயிரத்து நானூறு சேக்கல் நிறையாயிருந்தது**. தூபவர்க்கம் நிறைந்த பொன் தூப கரண்டிகள் பன்னிரண்டு, ஒவ்வொன்று பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல்கணக்கின்படி பத்துச் சேக்கல்நிறையாக, தூப **கரண்டிகளின் பொன்னெல்லாம் நூற்றிருபது சேக்கல் நிறையாயிருந்தது.**

**7:89–8:4 உடன்படிக்கைப் பெட்டியின் மேலிருந்து சத்தத்தைக் கேட்பான்.** மோசே தேவனோடே பேசும்படி ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசிக்கும் போது, தன்னோடே பேசுகிறவரின் சத்தம் சாட்சிப் பெட்டியின் மேலுள்ள கிருபாசனமான இரண்டு கேருபீன்களின் நடுவிலிருந்துண்டாகக் கேட்பான்; அங்கே இருந்து அவனோடே பேசுவார். நீ விளக்குகளை ஏற்றும்போது ஏழுவிளக்குகளும் விளக்குத்தண்டிற்கு நேரே எரிய வேண்டும் என்றுசொல் என்றார். கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்ட பிரகாரம் ஆரோன் செய்து, விளக்குத் தண்டிற்கு நேரே ஒழுங்காக அதின் விளக்குகளை ஏற்றினான். இந்தக்குத்துவிளக்கு, அதின்பாதம் முதல் பூக்கள் வரைக்கும் பொன்னினால் அடிப்பு வேலையாய்ச் செய்யப்பட்டிருந்தது; கர்த்தர் மோசேக்குக் காண்பித்த மாதிரியின் படியே அவன் குத்துவிளக்கை உண்டாக்கினான்.

**8:5-19 லேவியரின் பிரதிஷ்டை**;-**சேவைக்காக சுத்திகரிக்கப்படல்**.
லேவியர்கள் சுத்திகரிப்புக்காக நீரினால் தெளிக்கப்படவும், அவர்கள் சர்வாங்க சவரம் பண்ணி, தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து, தங்களைச் சுத்திகரிக்கக்கடவர்கள். பின்பு இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளை லேவியர்மேல் வைக்கக்கடவர்கள். லேவியர் கர்த்தருக்குரிய பணிவிடை செய்யும்பொருட்டு, ஆரோன் அவர்களை இஸ்ரவேல் புத்திரரின் காணிக்கையாகக் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டப்படும் காணிக்கையாய் நிறுத்தக்கடவன். (8:11) லேவியர்கள் மற்றக் கோத்திரத்தாருயை முதற்பிறப்பிற்காக காணிக்கையாக எண்ணக்கடவர்கள்.(3:5-13). அதன் பின் லேவியர் தங்கள் கைகளைக் காளைகளுடைய தலையின் மேல் வைப்பார்களாக; பின்பு நீ லேவியருக்காகப் பாவ நிவிர்த்தி செய்யும் பொருட்டு, கர்த்தருக்கு அவைகளில் ஒன்றைப்பாவ நிவாரணபலியாகவும், மற்றொன்றைச் சர்வாங்கதகன பலியாகவும்செலுத்தி, லேவியரை ஆரோனுக்கும் அவன் குமாரனுக்கும் முன்பாக நிறுத்தி, அவர்களைக் கர்த்தருக்கு அசைவாட்டப்படும் காணிக்கையாக்கி, இப்படி நீ லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்தெடுக்கக்கடவாய்; லேவியர் என்னுடையவர்களாயிருப்பார்கள்.

**8:20-26 லேவியர்களின் கடமைகள்.** பரிசுத்தப்படுத்தப்பட்டு ,கர்த்தருக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டு லேவியர்கள் தங்கள் கடமைகளையும் பொறுப்புக்களையும் எடுத்துக் கொள்வார்கள். 4;3 **இல் 30வது** வயதில் இவர்கள் சேவையைத் தொடங்குவார்கள்.அதேநேரம் 8; 24 இல் அவர்கள் 25 வயதில் சேவையைத் தொடங்குவார்கள் என்றும் கூறுகின்றது. இந்த 5 வருடங்களும் பயிற்சிபெறும் காலமாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது. இளைப்பாறும் வயதாக 50வயது குறிக்கப்பட்டுள்ளது.

**9:1-14 பஷ்கா;- கட்டளைகள், நீடிப்புகள்,** ஆனால் எதுவும் நீக்கப்படாது. எகிப்தைவிட்டு இஸ்ரவேலர்கள் புறப்பட்டு ஒரு வருடம் கடந்த நிலையில்.இது வருடத்தின் முதலாம் மாதம்( மார்சு–ஏப்ரலில் என நம்பப்படுகின்றது) இதன் 14ம் திகதியில் பஷ்கா பண்டிகை நினைவு கூரப்பட்டு, அவர்களுடைய விடுதலையை ஞாபகப்படுத்தல் வேண்டும். முகாம்களில் பிரேதங்களால் தீட்டுப்பட்டவர்கள் பஸ்காக் கொண்டாட்டங்களில் பங்குபற்றக் கூடாது. அவர்கள் குறித்து என்ன செய்வது என்று மோசேயிடம் கேட்கப்படல் வேண்டும். அவர்கள் ஞாயமான காரணம் இருந்து பஸ்காக கொண்டாடாமல் இருந்தால், ஒருமாதம் கழித்து அதனைக் கொண்டாட முடியும் என்று கர்த்தர் மோசேக்கு கூறியுள்ளார். தான் விரும்பி கொண்டாட்டத்தில் பங்குபற்றாமல் இருந்தால் அவர் வெளியேற்றப்பட வேண்டியவராவர், அந்நியர், பஸ்க்காவைக் கொண்டாட விரும்பினால், அவர் இஸ்வேலர்களுக்குரிய நிபந்தனைகளைக்கைக் கொள்ளல் வேண்டும். (.யாத் 12:48-49)

**9:15-23 மேகம் ;- இது நகர்ந்தால் அவர்கள் நகர்வார்கள்., இது நின்றால் அவர்கள் நிற்பார்கள்.** மேகஸ்தம்பமும் அக்கினிஸ்தம்பமும் வழிகாட்டியபடியே இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில் பிரயாணம் செய்தார்கள்..(யாத் 13:21-22; 40:34-38). ஆசாரிப்புக் கூடாரத்தின் மீது மேகஸ்தம் நிலைத்திருக்குமாயிருந்தால் அந்த இடத்தில் இஸ்ரவேலர்கள் முகாமிடுவார்கள். எப்போது திரும்பவும் மேகஸ்தம்பம் நகரத் தொடங்குமோ அப்போது கூடாரங்களைக் கழற்றிக் கொண்டு பிரயாணத்தைத் தொடங்குவார்கள்.

**10:1-10 வெள்ளி பூரிகைகளின் வித்தியாசமான சத்தங்கள்**. ஜனங்களுடன் தொடர்பு கொள்வதற்காக இரண்டு வெள்ளிப் பூரிகைகள் செய்யப்பட்டன.இரண்டு பூரிகைகளும் முழங்கும்போது ஜனங்கள் எல்லாரும் ஆசாரிப்புக் கூடாரத்தில் ஒன்றுசேரல் வேண்டும். ஒரு பூரிகை மட்டும் ஒலிக்கும்போது தலைவர்கள் மட்டும் ஒன்றுசேரல் வேண்டும்.பெருஞ்சத்தம் சிறிதாக ஊதும்போது ((10:6) கூடாரத்தைப் பிடுங்கிக் கொண்டு பிரயாணத்தைத் தொடங்கக் கடவர்.

**சீனாயிலிருந்து காதேஸ்வரை;- மனமுறிவு 10:11–20:13)**

**10:11-36 சீனாயிலிருந்து புறப்படுதல்.**;-மேகஸ்தம்பம் நகரும்போது அவர்களும் நகருவார்கள். எகிப்திலிருந்து புறப்பட்ட நாளிலிருந்து இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் 20ம் திகதி மேகஸ்தம்பம் நகரத் தொடங்கியது., அதனால் இஸரவேலர்கள் கூடாரங்களைப் பிடுங்குக் கொண்டு பிரயாணத்தைத் தொடங்கினார்கள் முகாம்களின் வரிசையின்படியே அவர்களின் புறப்படுதல் ஆரம்பமானது. புறப்படுதலை யூதா, இசக்கார்,செபுலொன் கோத்திரங்கள் ஆசாரிப்புக் கூடாரத்தின் கிழக்குப்பக்கத்தில் இருந்தவர்கள் புறப்படுதலை வழிநடத்தினார்கள் .கோசொனியர்களும்,மொறொரியர்களும் அதனைப் பின் தொடர்ந்து ஆசாரிப்புக் கூடாரத்

தட்டுமுட்டுக்களுடன் புறப்பட்டார்கள்.அதன் பிற்பாடு ரூபன் ,சிமியோன், காத் என்னும் கோத்திரத்தார் தெற்கிலிருந்து புறப்பட்டார்கள்.அதன்பிற்பாடு கோத்தியர்கள் ஆசாரிப்புக் கூடாரத் தளபாடங்களுடன் புறப்பட்டார்கள்.அதன் பிற்பாடு எப்பிராயீம், மனாசே, பென்யமீன் கோத்திரங்கள் மேற்கிலிருந்து புறப்பட்டன. தான், ஆசேர்,நப்தலி,என்பவர்கள் தெற்கிலிருந்து புறப்பட்டார்கள் .மோசே மீதியான் தேசத்து உறவினராகிய கோபாப் என்பவரை இஸ்ரவேலர்களுடன் இணையும்படி வேண்டிக் கொண்டார். மேகஸ் தம்பம் நகரும்போது இஸ்ரவேலர்கள் முகாமை விட்டுப்புறப்படல் வேண்டும். உடன்படிக்கைப் பெட்டியும் ஆசாரிப்புக்கூடாரமும் அவர்களுடன் கொண்டு செல்லப்படும்.மோசே ஜெபத்துடன் “ கர்த்தாவே எழும்பும், உம்முடைய எதிரிகள் **சிதறடிக்கப்படுவார்களாக, உம்முடைய சமூகத்தைவிட்டு அவர்கள் ஓடிப் போவார்களாக என்று** ஜெபிப்பார். உடன்படிக்கைப்பெட்டி தரித்து நிற்கும்போது, மோசே **“ ஓ கர்த்தாவே , எண்ணுக் கடங்காத இஸ்ரவேலர்கள் மத்தியில் திரும்பும் என்று ஜெபம்செய்வார்.**

**11:1-3கர்த்தரடைய கோபத்தின் அக்கினி வானத்திலிருந்து இறங்கியது**.ஜனங்கள் பிரயாணம் தொடங்கி சில மணிநேரத்தில் ஏதோ சில காரணங்களுக்காக கர்த்தரிடம் முறையிட்டார்கள் கர்த்தருக்கு அவர்களின் முறையீடுகள் கோபத்தை ஏற்படுத்தியபடியால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி வெளிப்புறத்திலிருந்த சிலரைப் பட்சித்தது.ஆனால் மோசே அவர்களுக்காக வேண்டுதல் செய்தபோது அந்த அக்கினி அவிந்து போயிற்று.

**11:4-23 “அந்த பழைய நாட்களின் அடிமைத்தனம் நல்லது” என்றார்கள்.** இப்பொழுது நம்முடைய உள்ளம் வாடிப்போகிறது; இந்த மன்னாவைத் தவிர, நம்முடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே என்று சொன்னார்கள். இறைச்சிக்காக அழுதார்கள். உம்முடைய கண்களிலே எனக்குக் கிருபை கிடைத்ததானால், இப்படி எனக்குச் செய்யாமல், என் உபத்திரவத்தை நான் காணாத படிக்கு இப்பொழுதே என்னைக் கொன்றுபோடும் என்று வேண்டிக் கொண்டான் அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் ஜனங்களுக்கு மூப்பரும் தலைவருமானவர்கள் இன்னார் என்று நீ அறிந்திருக்கிறாயே, அந்த மூப்பரில் எழுபது பேரைக் கூட்டி, அவர்களை ஆசரிப்புக் கூடாரத்தினிடத்தில் அங்கே உன்னோடே கூட வந்து நிற்கும்படி செய்.கர்த்தர் இஸ்ரவேலர்களுக்கு இறைச்சி கொடுக்கப்படும் என்று வாக்களித்தார். ஆனால் அந்த இறைச்சி அவர்களுக்கு அருவருப்பாக இருக்கும்.

**11:24-30 “அவர்கள்ஆவிக்குரியவர்களாக இருப்பதை நான் விரும்புகிறேன்”** தெரிவு செய்யப்பட்ட 70 பேர்மீதும் கர்த்ர் கூறியபடி தீர்க்கதரிசனம் சொல்ல ஆரம்பித்தார்கள். மற்றவர்கள் தீர்க்கதரிசனம் சொல்வதை நிற்பாட்டினர். பாளையத்தில் இருந்த எல்தாத்,மேதாத்தும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.மோசே, மற்றவர்கள் தீர்க்கதரிசனம் சொல்வதை நிற்பாட்டினார் என்று யோசுவா கருதினார்.மோசே அதனை மறுத்து, எல்லோரும்,முறையிடுவதை நிறுத்தி, ஆவியில் நிறைந்தால் நல்லது என்று கூறினார்.யாவரும் கர்த்தருக்கு உபயோகப்பட வேண்டும் ஆவிக்குரிய வரங்களை பெற வேண்டும் என வாஞ்சை கொண்ட மோசே.

**11:31-35 .சாப்பாட்டு மேசையில் மரணம்**. வாக்குப்பண்ணின படி இறைச்சிக்காக பெருந்தொகையான காடைகளைக் கர்த்தர் அனுப்பினார்.அதை அவர்கள் அனுபவித்துச் சந்தோஷமாக இருக்கையில்,கர்த்தர் கூறியபடியே கொள்ளைநோயை அனுப்பினார், அவர்களில் அநேகர் மரித்தார்கள்.

**12:1-16** உலகில் மிகவும் தாழ்மையான மனிதன் மீது குற்றம் கண்டுபிடித்தார்கள்.மோசேயின் சொந்த சகோரியும், சகோதரனுமான மீரியாமும், ஆரோனும் , எதியோப்பிய பெண்ணைத் திருமணம் முடித்ததாக குற்றம் சாட்டினார்கள். அவர்களும்,மோசேயின் தலைமைத்துவ பங்க ளிப்பைக் குறித்து பொறாமை கொண்டிருந்தார்கள். ஆனாலும் மோசே உலகிலேயே மிகவும் தாழ்மையுள்ள மனிதனாக இருந்தார். (12:3)!மோசேக்கு எதிராகப் பேசியவர்களை கர்த்தர் கடு மையாகத் தண்டித்தார். மீரியாம் குஷ்டரோகியானாள். மோசே மீரியாமிற்காக ஜெபம் செய்தார் அவள் சுகமானாள், ஆனாலும் 7 நாள்கள் கூடாரத்தை விட்டு விலக்கப்பட்டிருந்தாள். மிரியாம் சேர்த்துக் கொள்ளப்படுமட்டும் ஜனங்கள் பிரயாணம் பண்ணாதிருந்தார்கள்.

**13:1-20** “**பாரான்வனாந்தரத்தில் இருக்கிற காதேசு”** கானான் குடியிருப்புக்கு ஏற்றதா? காதேஸ் பாரானில் முகாமிட்டிருக்கும் போது, மோசே ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும், 12 பேரைத் தெரிவு செய்து கானானுக்குள் சென்று அதனை ஆராய்ந்து வரும்படியும் அங்குள்ள மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்ற தகவல்களுடனும் ,அந்த நிலத்தின் வளம்குறித்தும் , தாவரங்களின் செழிப்புப் பற்றியும் ஆராய்ந்துவரும்படி கூறியிருந்தான்.

**13:21-25 .சாட்சி**;-ஒரு திராட்சைக் குலையை இரண்டு மனிதர்கள் சுமந்து வந்ததே கானின் செழிப்புக்கு அத்தாட்சியாக இருந்தது. அவர்கள் எஸ்கோல் பள்ளத்தாக்குமட்டும் போய், அங்கே ஒரேகுலையுள்ள ஒரு திராட்சக்கொடியை அறுத்தார்கள்; அதை ஒரு தடியிலே இரண்டுபேர் கட்டித்தூக்கிக் கொண்டு வந்தார்கள்; மாதளம்பழங்களிலும் அத்திப்பழங்களிலும் சிலவற்றைக் கொண்டுவந்தார்கள்

**13:26–14:9 . விடை**;-**இரண்டுபேர் போவோம் என்றார்கள்**, மிகுதியானோர்,போக முடியாது என்றார்கள்.நாற்பது நாள் தேசத்திற்குள் சென்று வந்தவர்கள், அந்தத் தேசம் மிகவும் நல்லது என்றார்கள்,அவர்களுள், 10பேர், இஸ்ரவேலர்களைப் பார்க்கிலும், கானானியர்கள் பலம் வாய்ந் தவர்கள், அவர்களுடன் யுத்தம் செய்து வெற்றி பெற்றுக் கொள்ள முடியாது என்று கூறினார் கள். இதற்கு, காலேப்புவும்,யோசுவாவும் மறுப்புத் தெரிவித்து, ஒரேயடியாக நாட்டிற்குள் நுழை வோம் என்றார்கள், ஆனால் ஜனங்கள் 10 பேர் கொடுத்த எதிர்மறையான அறிக்கைக்குச் சார் பாக நின்றார்கள்.

**14:10-38 .அவர்களின் அவநம்பிக்குரிய பலன். 40 வருடங்களுக்காக 40 வருடங்கள்.**
இஸ்ரவேலர்களின் அவநம்பிக்கையால் கர்த்தர் அவர்கள் மீதுகோபமடைந்தார். அவர்கள் யாவரையும் நிர்மூலமாக்கிவிட்டு மோசே மூலம் அவருடைய சந்ததியை உருவாக்குவேன் என்று கர்த்தர் அவர்களை மிரட்டினார்.அப்படி ஒன்று நிகழ்ந்தால் கர்த்தருடைய நாமம் எகிப்தியர் மத்தியில் கனவீனம் அடையும் என்று கர்த்தருடன் மோசோ வாதாடினார். ( யாத் 32:1-14). அவர் கர்த்தருடைய இரக்கத்திற்காக மன்றாடினார். இஸ்ரவேலர்களை மன்னிப்பதாக கர்த்தர் கூறினார். ஆனாலும், தன்னுடைய வல்லமைகளை கண்டவர்கள், அனுபவித்தவர்கள் யாவரும் என்னை நம்பாமலிருந்தபடியால், அவர்கள் யாவரும் கானான் தேசத்திற்குள் செல் வதற்கு முன்பு மரித்துவிடுவார்கள் என்று கூறினார்.ஆனாலும் யோசுவாவும், காலேப்பு மட்டும் தேசத்தைச் சுதந்தரிப்பார்கள் என்றார். கர்த்தர் 20 வயதிற்கும் அதற்கு மேற்பட்டவர்களும் மரிப்பார்கள் என்று குறிப்பிட்டுக் கூறியிருந்தார். (14:29-31).கர்த்தர் கொடுக்கும் நல்ல தேசத்தை இஸ்ரவேலர்கள் சந்தேகப்பட்டார்கள் அதுமட்டு மல்லாமல் கர்த்தருடைய வல்லமையிலும் சந்தேகப்பட்டார்கள்.

**14:39-45 . அவர்கள் மனம் திரும்பினார்கள்;-** இஸ்ரவேலர்கள், கர்த்தர் தங்களுக்கு எதிராக நியாயத் தீர்ப்பை ஏற்படுத்துகிறார் என்று கேள்விப்பட்டபோது, தாங்கள் பாவம் செய்தோம் என்று அறிக்கையிட்டு, தாங்கள் கானான் நோக்கி முன்னேற விரும்புவதாகவும் அறிக்கையிட்டார்கள் .மோசே எச்சரித்தபடியால் அவர்கள் இதனைச் செய்தார்கள், அதனால் கர்த்தர் அவர்களுடன் இருக்கவில்லை,அதனால் எதிரிகளிடம் பயங்கரமாக உபாதைப்பட்டார்கள்.

**15:1-21 கர்த்தரை சாந்தப்படுத்த காணிக்கை கொடுத்தார்கள்.;-எப்படி போஜனபலியும் (தானியம்மும்),** பானபலியும் தகன பலியுடன் கொடுப்பது என்று அறிவுறுத்தல் கொடுத்திருந்தார். (15:1-16).தகனபலியானது விஷேசித்த பொருத்தனைகளுக்கா,சுயவிருப்புக் காணிக்கைக்கா, பண்டிகைக் காணிக்கைக்காக கொடுக்கப்படல் வேண்டும் என்றும் அவை கர்த்தருக்கு சுகந்த வாசனையாக இருக்கும் என்றும் கூறியிருந்தார் .இஸ்ரவேலர்கள் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் சென்றவுடன், அங்கு தங்கள் முதற்பலனினாலே கர்த்தருக்கு பண்டிகையை கொண்டாடவேண்டும்.

**15:22-29 கர்த்தரைச் சமாதானப் படுத்தும் காணிக்கை;-** அடுத்த அறிவுறுத்தல் அறியாமல் செய்த பாவத்திற்கான தகனபலிகள். அன்றியும் தேசத்திலே பிறந்தவர்களிலாகிலும் அந்நியர்களிலாகிலும் எவனாவது துணிகரமாய் யாதொன்றைச் செய்தால், அவன் கர்த்தரை நிந்திக்கிறான்; அந்த ஆத்துமா தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டு போகவேண்டும்.

**15:30-36** .சமாதானப்படுத்துதல் முடியாமல் போகும் போது.வேண்டுமென்று செய்த பாவத்திற்கான பலி என்ன என்று கூறப்படவில்லை.அந்த மனிதன் புறம் தள்ளப்படல் வேண்டும் அன்றியும் தேசத்திலே பிறந்தவர்களிலாகிலும் அந்நியர்களிலாகிலும் எவனாவது துணிகரமாய் யாதொன்றைச்செய்தால், அவன் கர்த்தரை நிந்திக்கிறான்; அந்த ஆத்துமா தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டுபோகவேண்டும்(15:30) ஓவ்வு நாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குவது கல்லெறிந்து கொலை செய்யப்படவேண்டிய பாவமாகும்.( 15:32-36

**15:37-41 "தொங்கல்களைஉண்டாக்குதல்".(குஞ்சம்).** இஸ்ரவேலர்கள் தங்கள் ஆடைகளில் தொங்கலகளை (குஞ்சம்) உண்டாக்கவேண்டும்.இது அவர்களுக்கு கர்த்தரின் கட்டளைகளை ஞாபகப்படுத்துவதுடன் அவற்றை தியானிக்கும்படியும் ஞாபகப்படுத்தும்.

**16:1-11 கோராகு, தாத்தான், அபிராம் எதிர்த்தார்கள்.**;-மோசேயும், ஆரோனும், 250 தலைவர்களினால் விரோதமாக்கப்பட்டார்கள்.கிளர்ச்சி கோகாத்தியனாகிய கோராவின் தலைமையில் தாத்தான், அபிராம் உடன்சேர்ந்து நடாத்தப்பட்டது. அவர்கள் கர்த்தர் முன்பாக கொண்டுவரப்பட்டு யார் தலைவர் என்பது அங்கு தீர்மானிக்கப்படும் என்று கூறினார்.

**16:12-19 கலகம் செய்தோர் அழைக்கப்பட்டார்கள்;-** "இந்த வனாந்தரத்தில் எங்களை அழிக்கப்பார்க்கிறீர்". தாத்தானும், அபிராமும் கர்த்தருக்கு முன்பாக வரமறுத்தார்கள்.அவர்கள் இல்லாமலே கூட்டம் இடம்பெற்றது.. கர்த்தர் தன்னுடைய மகிமையை முழுஇஸ்ரவேலர்களின் மத்தியில் காண்பித்து, முழுவரையும் அழித்துப் போடுவேன் என்றும் எச்சரித்தார்.

**16:20-35 கிளர்சியாளர்களின் விதி**;-வனாந்தரத்தில் அழிக்கப்பட்டார்கள்.மோசே கர்த்தரிடம் மன்றாடினான், கிளர்ச்சியாளரோடு அவர்களும் அழிந்துபோகமல் இருப்பதற்காக, கர்த்தர் சபையார் அனைத்தையும்,கோரா, தாத்தான், அபிராம் ஆகியோரின் கூடாரத்திலிருந்தும் வெளியேறும்படி அறிவித்தார். சபையார் யாவரும் அவர்களுடைய கூடாரத்தைவிட்டு வெளியேறியவுடனே , நிலம் அதிசயிக்கத் தக்கவிதமாகப் பிளந்தது, கோராகு, தாத்தா ன்,அபிராம் என்பவர்களை விழுங்கிப்போட்டது.மிகுதியான 250 எதிர்ப்பாளர்களும் அக்கினியால் அழிக்கப்பட்டார்கள்.

**16:36-40 ஞாபகமாக மீள்சுழற்சி செய்யப்பட்டது**.மரித்துப் போன கிளர்ச்சியாளர்கள் கொண்டுவந்த தூபகலசங்களை எடுத்து, அவைகளைப் பலிபீடத்தை மூடும் தகடுகளாக அடிப்பித்தான். ஆரோனின் புத்திரராய் இராத அந்நியன் ஒருவனும் கர்த்தருடைய சந்நிதியில் தூபங்காட்டவராதபடிக்கும், கோராகைப் போலும் அவன் கூட்டத்தாரைப் போலும் இராதபடிக்கும், இஸ்ரவேல்புத்திரருக்கு ஞாபகக்குறியாயிருக்கும் பொருட்டு, கர்த்தர் மோசேயைக் கொண்டு தனக்குச் சொன்னபடியே அவைகளைப் பலிபீடத்தை மூடும் தகடுகளாக அடிப்பித்தான்.

**16:41-50 . மரித்தோருக்கும் ஜீவனுள்ளொருக்கும் நடுவாக நின்றான். ,** மரித்துப்போன கிளர் ச்சியாளருக்காக , ஜனங்கள்,மோசேக்கும், ஆரோனுக்கும் எதிராக குற்றம் சாட்டினார்கள், அதனால் கர்த்தர், ஜனங்களுக்குள் கொள்ளை நோயை அனுமதித்தார். உடனடியாக மோசே, சபையாருக்காக பாவநிராணபலி செலுத்தும்படி ஆரோனுக்கு கட்டளையிட்டார் .செத்தவர் களுக்கும்உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே நின்றான்; அப்பொழுது வாதையும் நிறுத்தப் பட்டது. கோராகின் காரியத்தினிமித்தம் செத்தவர்கள் தவிர, அந்த வாதையினால் செத்துப் போனவர்கள் **பதினாலாயிரத்து எழுநூறுபேர்.** வாதைநிறுத்தப்பட்டது; அப்பொழுது ஆரோன் ஆசரிப்பு க்கூடார வாசலுக்கு மோசேயினிடத்தில் திரும்பிவந்தான்.

**17:1-13 "கோல்துளிர்க்கும்"**;-கோரோசுடைய கிளர்ச்சியாளர்களினால், ஆரோனுடைய அதிகாரத்திற்கு எதிராக விரோதம் எழுந்தது. ஆரோனின் தலைமைக்காக கர்த்தர் அற்புதமான சாட்சியை உருவாக்கினார். ஒவ்வொரு வம்சத்தினுடைய தலைவனிடத்திலும் , ஒவ்வொரு கோலாகப்பன்னிரண்டு கோலைவாங்கி, அவனவன் கோலில் அவனவன் பேரை எழுதி கர்த்தரு டைய சந்நிதிக்கு முன்வைத்தார்கள், இவற்றுடன் ஆரோனின் கோலும் வைக்கப்பட்டது. அந்தக் கோல்களை மோசே சாட்சியின் கூடாரத்திலே கர்த்தருடைய சமுகத்தில் வைத்தான் .மறு நாள் மோசே சாட்சியின் கூடாரத்துக்குள் பிரவேசித்த போது, இதோ, லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல்துளிர்த்திருந்தது; அது துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமைப்பழங்களைக் கொடுத்தது. இந்த வெளிப்படுத்தல், ஆரோனின் ஆசாரியத்துவம் கர்த்தருடைய தெரிவு என்பதை புலப்படுத்தியது., இந்தப் பதவிக்கு யாரும் போட்டியிட முடியாது. ஆரோனுடைய கோல் பலி பீடத்திற்கு முன்பாக வைக்கப்படல் வேண்டும் என் கர்த்தரால் மோசே வலியுறுத்தப்பட்டார்., (17:4, 10)

***18:1-7 ."அவர்கள், அவர்கள் மட்டுமே,உனக்கு உதவ முடியும்".***திரும்பவும் ஒரு முறை கர்த்தர் ஆரோனையும் அவருடைய பிள்ளைகளையும் ஆசாரியர்களாகத் தெரிவு செய்ததை உறுதிப்படுத்தின பின்பு, லேவி குடும்பத்தில் மிகுதியானவர்கள், கர்த்தருடைய வேலையில் அவர்களுக்கு உதவியாக இருக்கலாம் என்று கட்டளையிட்டார்.ஆகிலும் அவர்களும் நீங்களும் சாகாதபடிக்கு, அவர்கள் பரிசுத்தஸ்தலத்தின் பணிமூட்டுகளண்டையிலும் பலிபீடத்தண்

டையிலும் சேராமல் இருக்க வேண்டும் அவர்கள் கூடாரத்துக்கடுத்த எல்லாப் பணிவிடையையும்செய்ய, ஆசரிப்புக்கூடாரத்தின் காவலைக்காக்கக்கடவர்கள்; அந்நியன் ஒருவனும் உங்களிடத்தில் சேரக்கூடாது.(18:3-4)

**18:8-20 " இந்தப்பகுதி ஆசாரிகளுக்கு மட்டுமானது".** கானான் தேசத்தில் நிலம் ஆசாரியர்களுக்கு வழங்கப்படாதபடியால்,அவர்களுடைய வருமானம் காணிக்கைகளுக்கூடாகவே கிடைக்கும். ஆசாரியர்களுக்காக வழங்கப்படும் காணிக்கைகள் தகனிக்கப்படமாட்டாது. இஸ்ரவேல் புத்திரர் நடுவில் நானே உன்பங்கும் உன்சுதந்தரமுமாய் இருக்கிறேன் என்று ஆசாரியர்களுக்கு கர்த்தர் கூறியிருக்கின்றார். (18:20).
**18:21-32** ."அவர்கள் உனக்குத் தசமபாகம் தருவார்கள், **அதில் எனக்கு நீ தசமபாகம்** தரவேண்டும்." கானான் தேசத்தில் லேவியர்களுக்கு நிலம் கொடுக்கப்படாதபடியால், இஸ்ரவேலர்களுடைய தசமபாகம் அனைத்தும் அவர்களுக்குரியதாகும். அந்த தசமபாகத்தில் அவர்கள் கர்த்தருக்கு தசமபாகம் செலுத்துதல் வேண்டும்.

**19:1-22 "சிவப்பானஒருகிடாரியின் சாம்பல்**". சடங்காச்சாரமான சுத்திகரிப்பு, ஒரு சிகப்பான கிடாரி தெரிவு செய்யப்பட்டு, முகாமுக்கு வெளிப்புறமாக சுட்டெரிக்கப்படல் வேண்டும், அதன் சாம்பல்கள் பாதுகாக்கப்படல் வேண்டும். யாராவது சுத்திகரிக்கப்பட வேண்டுமாயின், சாம்பலை தடவி தண்ணீருடன் கலந்து அதனைத் அந்த மனிதன் மீது தெளித்து சுத்திகரிக்கப்படக்கடவன்.பிரேதத்தைத் தொட்டவனும், இறந்தவன் வீட்டுக்குள் சென்றவனும், பிரேதத்தைத் தொட்டவனும் சடங்காச்சாரத்தின்படி தீட்டுள்ளவனாவான், அவர்கள் இந்தச் சாம்பலினால் சுத்திகரிகக்கடவர்கள் . இவ்வாறு சுத்திகரிப்பதற்கு மறுப்பவர்கள் வெளியேற்றப் படுவார்கள். காளையின் சிகப்பு நிறமானது **இரத்தத்திற்கு அடையாளமாகும்.**

**20:1 .மீரியாமின் மரணம்.**வனாந்தர யாத்திரையின் 40வது வருடத்தின் முதலாம் மாதத்தில் மோசேயின் சகோதரியான மீரியாம் மரணமடைந்தாள். அவளே, இஸ்ரவேலர்கள் கானான் தேசத்தை அடைவதற்கு முன்பு மரித்த விசுவாசியாத பரம்பரையின் கடைசியாளாகும்.

**20:2-13 ."அவர் பேசும்படி கூறினார்",** அவர்கள் அதற்குப்பதிலாக அடித்தார்கள்.". திரும்பவும் இஸ்ரவேலர்கள் நீர் பற்றாக்குறைவினால் கர்த்தருக்கு எதிராக முறுமுறுத்தார்கள்.அவர்கள் தங்களுக்காவே பரிதாபப்பட்டார்கள், கோராவின் கிளர்ச்சியில் தாங்களும் மரித்திருக்கலாம் என்றும் கூறினார்கள், அல்லது எகிப்தில் இருந்திருக்கலாம் என்றும் அங்கலாய்த்தார்கள்.முன்பு ஒரு முறை **பாறையை** அடிக்கும் படிமோசே கட்டளை பெற்றிருந்தார், அதன்படி தண்ணீர் கிடைத்தது, (யாத் 17:3-6). ஆனால் இங்கு, மோசேக்கும், ஆரோனுக்கும் **பாறையுடன் பேசும்படி** கட்டளை கொடுக்கப்பட்டது. அனால், அவர்கள் பேசுவதற்குப் பதிலாக கோபத்துடன் ***பாறையை அடித்தார்கள்.*** இந்தச் செயற்பாடானது, அவர்களை, இஸ்ரவேலர்களை கானான் தேசத்திற்குள் வழி நடத்துவதற்கு தகுதியற்றவர்களாக மாற்றியது.

**காதேசிலிருந்து மோவாப்;- எதிர்பார்ப்பு (20:14–36:13)**

**20:14-21 .ஞாயமான வேண்டுதல்**, முரட்டுத்தனமாக நிராகரிக்கப்பட்டது.தெற்குப்பக்கமாக சவக்கடலின் முடிவு நோக்கி இஸரவேலர்கள் தென்பக்கமாக பிராயாணப்படும்போது, மோசே ஏதோமின் ராஜாவிடம் (ஏசாவின் பரம்பரையினர்) அவர்களுடைய நாட்டிற் கூடாக பிரயாணம் செய்வதற்கு அனுமதிகேட்டார். அவர்கள் நாட்டுக்கூடாகப் பிரயாணம் செய்யும்போது , அவர்

களின் வழியில் எந்தவித இடஞ்சல்களும் செய்யாமல் ,அவர்கள் பாவிக்கும் தண்ணீருக்கான பெறுமதியையும் செலுத்திச் செல்வதாகவும் வாக்களித்தார். ஆனால் அந்த அரசன் மோசேயின் வேண்டுகோளை மறுத்துவிட்டார்.

20:22-**29ஆரோன் மரணமடைதல்.** ஆசாரியர்களின் வெளிச்சம் கடந்து சென்றது .மரணம் நெருங்குகின்றது என்று எச்சரிக்கப்பட்டார். ஆரோன், அவரது மகன் எலியேசர், மற்றும் மோசே ஆகிய மூவரும் ஓர் மலைக்கு ஏறிப்போனார்கள். அங்கோ,மோசே ஆரானின் ஆசாரிய உடுப்பைக் கழைந்துவிட்டார்.,அதனை எலியேசர் மீது உடுத்தினார், இது தகப்பனிடமிருந்து மகனுக்கு ஆசாரியத்துவம் கடந்துசெல்வதைக் குறிக்கின்றது.அங்கு ஆரோன் மரித்தார், மோசேயும், எலியேசரும் முகாமிற்கு மீண்டும் இறங்கி வந்தார்கள்.

**21:1-3 இஸ்ரவேலர்கள் ஆராத்தை தோல்வியடையச் செய்தல்**;- ஆராத்தின் அரசன் இஸ்ரவேலர்களை தாக்கிச் சிலரை சிறைப்பிடத்தார்கள். ஆனால் மீண்டும் இஸ்ரவேலர்கள் ஆராத்துடன் யுத்தம் செய்து அவர்களைத் தோற்கடித்தார்கள்.

**21:4-9 பாம்பின் பிரச்சனைகள் வெங்கலச்சர்ப்பத்தினால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது**. மீண்டும் இஸ்ரவேலர்கள் குற்றம் சாட்டினார்கள், அதனால் கர்த்தர் கோபமடைந்து, பாம்புகளை இஸ்ரவேலர்கள் மத்தியில் அனுப்பினார்.இதனால் பலர் மடிந்தார்கள். மோசேக்கு, ஒரு வெங் கலச் சர்ப்பத்தை செய்து அதனை ஒரு கோலில் தூக்கிவைக்கும்படி கட்டளை கர்த்தரிடம் இருந்து வந்தது. யார் யார் விசுவாசத்துடன் வெங்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்க்கின்றார்க ளோ அவர்கள் பிழைத்துக் கொள்ளுவார்கள்.இது இயேசுக் கிறிஸ்த்துவின் சிலுவை மரணத்தி ற்கு ஒப்பானது. ( யோவான்3:14).

**21:10-20 . மோவாப்பை நோக்கி**;- இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்பட்டுப்போய், ஓபோத்தில் பாளயமிறங்கினார்கள். அங்கேயிருந்து பேயேருக்குப் போனார்கள்; ஜனங்களைக் கூடிவரச்செய், அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பேன் என்று கர்த்தர் மோசேக்குச் சொன்ன ஊற்று இருக்கிற இடம் அதுதான்.

**21:21-30 இஸ்ரவேலர்கள் சீகோனைத் தோற்கடித்தார்கள்.**அம்மோனிய அரசனிடம், சீகோனுக்கூடாகப் பிரயேணம் செய்வதற்கு அனுமதி கேட்டார்கள், ஆனால் அவர்கள் மறுத்துவிட்டார்கள்.இஸரவேலர்கள் அம்மோனியர்களுடன் போரிட்டு அவர்களைத் தோற்கடித்தார்கள்.;

**21:31-35** ஒக் என்பவனும் அவரோடு சேர்தவர்களும் தடுப்பதற்கு முயற்சித்தார்கள். ஒக் என்பவனும் அவனோடு சேர்ந்தவர்களும் மரணத்தைத் தழுவினார்கள். ஒக், பாசானின் ராஜாவும் அவனுடைய ஜனத்தாரும், சீகோனும், அம்மோனியர்களால் செய்ய முடியாததைச் செய்ய முயற்சித்தார்கள்- அதாவது இஸ்ரவேலர்களைத் தடுத்து நிறுத்த முனைந்தார்கள். ஒக் உடன்யுத்தம்செய்து அவர்களை இஸ்ரவேலர்கள் கர்த்தரின் உதவியுடன் தோற்கடித்தார்கள். (**சங்**. 135:10-11; 136:18-20).

**22:1-20 . பாலாக் பிலேயாமுடன் உடன்படிக்கை செய்தல்**.;-**காசுக்காக சபித்தல்** .இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணி, எரிகோவின் கிட்ட இருக்கும் யோர்தானுக்கு இக்கரையிலே

மோவாபின் சமனான வெளிகளில் பாளயமிறங்கினார்கள்.பாலாக் மோவாப்பின் அரசன், அம்மோனியர்களை, இஸ்ரவேலர்கள் தோற்கடித்ததை அறிந்திருந்தான், அப்படியே இஸ்ர வேலர்கள் தனக்கும் செய்யப் போகிறார்கள் என்று பயந்தான்.மீதியான் தேசத்துத் தலைவ ர்களுடன் இணைந்து, (22:4, 7),பிலேயாமுக்கு பணம் கொடுத்து இஸ்ரவேலர்களைச் சபிப்பதற்கு முனைந்தார்கள்.மோவாபின் மூப்பரும் மீதியானியரின் மூப்பரும் பணத்தையும் எடுத்துக் கொண்டு பிலேயாமிடம் வந்து வரும்படிகேட்டார்கள்.பிலேயாம் தேவனிடம் கேட்டான் அவர் போக வேண்டாம் என்றார். தொடர்ந்து கேட்டதால் பிலேயாமை இஸ்ரவேலர்களிடம் போவதற்கு அனுமதித்தார்.ஆனால் கர்த்தர் சொல்லும் வார்த்தைகள் தவிர வேறு வார்த்தைகள் பேசக் கூடாது என்று எச்சரித்திருந்தார்.

**22:21-35 எந்தக் கழுதை உண்மையானது?** பிலேயாம் இஸ்ரவேலரிடம் பிரயாணம் பண்ணும் போது, கர்த்தர், தன்னுடைய தூதனை பிலேயாம் செல்லும் வழியில் நிற்கும்படி ஏற்பாடு செய்தார்.பிலேயாமினால் தூதனைப் பார்க்கமுடியவில்லை, ஆனால் அவனைக் கழுதை பார்த்தது. தூதனை விலத்திப் பிரயாணம் செய்வதற்கு இரண்டு முறை முயற்சி செய்தது. ஆனால் அந்த இரண்டு தடவையும்,பிலேயாம் கழுதையை அடித்தான். இரண்டாம் தடவை கழுதை பிலேயாமுடன் பேசியது.அதன் பிற்பாடு பிலேயாம் தூதனைக் கண்டான். தூதன் பிலேயாமை கொல்ல ஆயத்தமாக இருப்பதைப் பார்த்தான். திரும்பவுமாய்க் கர்த்தர் தான் சொல்லும் வார்தையையே பேசும்படி எச்சரித்தார்.

**22:36–24:25 .கர்த்தர் ஆசீர்வதிப்பவனை அவனால் சபிக்க முடியவில்லை**. இஸ்ரவேலர்களிடம் வந்த பிலேயாம், பாலாக்கைத் திருப்திப்படுத்தும் வண்ணமாக, இஸ்ரவேலர்களைச் சபிப்பதற்கு முயன்றார், ஆனால் சபிப்பதற்குப் பதிலாக ஆசீர்வதித்தார்.இரண்டாம் மூன்றாம் தடவைகளில் சபிக்கப்புறப்பட்டு. இன்னும் அதிகமாக அவர்களை ஆசீர்வதித்தான்.
**23:1-6 சர்வாங்க தகனாலியிடல். 23:8 இயலாமையை வெளிப்படித்திய பிலேயாம்.**
**23:23 யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை,இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை;**
25:1-18 இஸ்ரவேலர்கள் மோவாப்பியர்களால் கெடுக்கப்பட்டார்கள். இஸ்ரவேல் சித்தீமிலே தங்கியிருக்கையில், ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம்பண்ணத் தொடங்கி னார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்களின் தேவர்களையும் ஆராதிக்கத் தொடங்கினார்கள். இப்படி இஸ்ரவேலர் பாகால்பேயோரைப் பற்றிக்கொண்டார்கள்; அதனால் இஸ்ரவேலர் மேல் கர்த்தருடைய கோபம்மூண்டது. கர்த்தர் மோசேயை நோக்கி: கர்த்தருடைய உக்கிரமான கோபம் இஸ்ரவேலை விட்டு நீங்கும்படி நீ ஜனங்களின் தலைவர் எல்லாரையும் கூட்டிக்கொண்டு, அப்படிச் செய்தவர்களைச் சூரியனுக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதானத்தில் தூக்கிப்போடும்படி செய் என்றார். அப்பொழுது மோசேயும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் அனைவரும் ஆசரிப்புக் கூடார வாசலுக்கு முன்பாக அழுதுகொண்டுநிற்கையில், அவர்கள் கண்களுக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் ஒரு மீதியானிய ஸ்திரீயைத் தன் சகோதரரிடத்திலே அழைத்துக் கொண்டுவந்தான். அதை ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ் கண்டபோது, அவன் நடுச்சபையிலிருந்து எழுந்து, ஒரு ஈட்டியைத் தன் கையிலே பிடித்து, இஸ்ரவேலனாகிய அந்த மனிதன் வேசித்தனம் பண்ணும் அறையிலே அவன் பின்னாலே போய், இஸ்ரவேல் மனிதனும் அந்த ஸ்திரீயுமாகிய இருவருடைய வயிற்றிலும் ஈட்டி உருவிப்போக அவர்களைக் குத்திப்போட்டான்; அப்பொழுது

இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதை நின்று போயிற்று.பினெகாஸ் தன் தேவனுக்காக பக்திவைராக்கியம் காண்பித்து, இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவிர்த்தி செய்தபடியினால், அவனுக்கும் அவனுக்குப் பின்பு அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரியபட்டத்திற்குரிய உடன்படிக்கை உண்டாயிருக்கும் என்று சொல் என்றார்.(யோசு 24:33; சங்106:30-31). மீதியானியரை நெருக்கி அவர்களை வெட்டிப்போடுங்கள் என்று கர்த்தர் கூறினார். (25:16-18; 31:1-3)

**26:1-65ஜனங்களின் இரண்டாம் தொகை மதிப்பீடு**. கர்த்தர் புதிய ஜனத்தொகை மதிப்பீடு செய்யமுபடி கேட்டுக் கொண்டார்.முன்பு செய்த மதிப்பீடு போலவே(1:1-54),இதில் 20 வயதும் அதற்கு மேற்பட்ட யுத்தம் செய்யக் கூடியவர்களும் மதிப்பிடப்படுவார்கள். கணக்கெடுப்பின் எண்ணிக்கை 601,730.. முதலாவது மதிப்பீட்டில், ஐந்து கோத்திரங்கள் குறைவடைந்து காண ப்பட்டது, 7வது கோத்திரம் அதிகரித்துள்ளது. மொத்தமாக இஸ்ரவேலர்கள் 2,000 ஆண்கள் குறைவு காணப்பட்டது. கானான் தேசத்தில் நிலம் பங்கீடு செய்யும் போது, கர்த்தர், அதிக எண்ணிக்கையுள்ள கோத்திரத்தாருக்கு, அதிக நிலமும், சிறிய கோத்திரத்தாருக்கு சிறிய பங்கும் கொடுக்கும்படி கர்த்தர் மோசேக்கு அறிவுறுத்தினார். லேவிய கோத்திரம் திரும்பவுமாய் எண்ணப்பட்டு 23,000 காணப்பட்டார்கள், அவர்களின் தொகை அதிகரிப்பு 1,000 ஆக இருந்தது .கர்த்தர் கூறுயதுபோல , முதற் கணெக்கெடுப்பில் யோசுவாவையும், காலேப்பையும் தவிர மற்றவர்கள் அனைவரும் மரித்துவிட்டார்கள். (14:20-23, 29-32).

**27:1-11** செலோப்பியாத்தின் குமாரத்திகளாகிய மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள் என்பவர்கள் வந்து, ஆசரிப்புக் கூடாரவாசலிலே மோசேக்கும், ஆசாரியனாகிய எலெயாசாருக்கும், பிரபுக்களுக்கும், சபையனைத்திற்கும் முன்பாக நின்று: எங்கள் தகப்பன் வனாந்தரத்தில் மரணமடைந்தார்; அவர் கர்த்தருக்கு விரோதமாகக் கூடின கோராகின் கூட்டத்தாரில் சேர்ந்தவர் அல்ல, தம்முடையபாவத்தினாலே மரித்தார்; அவருக்குக்கு குமாரர் இல்லை. எங்கள் தகப்பனுக்குக் குமாரன் இல்லாததினாலே, அவருடையபேர் அவருடைய வம்சத்தில் இல்லாமல் அற்றுப்போகலாமா? எங்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே எங்களுக்குக் காணியாட்சி கொடுக்கவேண்டும் என்றார்கள். மோசே அவர்களுடைய நியாயத்தைக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு போனான். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: செலோப்பியாத்தின் குமாரத்திகள் சொல்லுகிறது சரிதான்; அவர்களுக்கு அவர்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே சுதந்தரம் கொடுக்க வேண்டும்; அவர்கள் தகப்பன் பின்வைத்த சுதந்தரத்தை அவர்களுக்குக் கிடைக்கும்படிசெய்வாயாக.

**27:12-14 . பார்ப்பதற்கு அனுமதி, ஆனால் வாழ்வதற்கல்ல**. கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இந்த அபாரீம் மலையில் ஏறி, நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்தைப்பார். நீ அதைப் பார்த்த பின்பு, உன் சகோதரனாகிய ஆரோன் சேர்க்கப்பட்டது போல, நீயும் உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய்; கர்த்தர் அவருக்குச் சொன்னது போல, அவருடைய கீழ்ப்படியாமையின் நிமித்தம்,வாக்குத்தத்த பூமிக்குள் செல்வதிற்கு தடைசெய்யப்பட்டார். (20:7-13).

**27:15-23 ."யோசுவா என்னுடைய ஆவியைப் பெற்றுள்ளான், அவன் உன்னைப்போலாவான்"**

கர்த்தரிடம் மோசே மேப்பனில்லத ஆடுகளை போல் இந்த மக்களிருக்க போகிறார்களே என்று ஜெபித்தார். கர்த்தர் மோசேயை நோக்கி, ஆவியைப் பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவா

என்னும் நூனின் குமாரனை நீ தெரிந்துகொண்டு, அவன் மேல் உன் கையை வைத்து, அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி, அவர்கள் கண்களுக்கு முன்பாக அவனுக்குக்கட்டளை கொடுத்து, இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படியும்படிக்கு , உன் கனத்தில் கொஞ்சம் அவனுக்குக் கொடு என்றார்,மோசே அவ்வாறு செய்தார்.

**28:1–29:40 விழாக்களும் காணிக்கைகளும். ஏன், என்ன, எப்போது** 28–29 வசனங்கள் காணிக்கைகள், பண்டிகைகள் குறித்து கூறுகின்றன

30:1-16 .பொருத்தனை செய்வதற்கான ஒழுங்குகள்.ஆண்களால் செய்யப்படும் பொருத்தனைகள் அனைத்தும் நிறைவேற்றப்படல் வேண்டும்.ஒரு பெண் திருமணம்முடியாமல் தகப்பனாருடைய அதிகாரத்தின் கீழ் இருந்தால்,அவர் அவளுடைய பொருத்தனையை அனுமதிக்கலாம், அல்லது தள்ளிவிடலாம். திருமணம் முடித்தவள் தன்னுடைய கணவனின் அதிகாரத்தின் கீழ் இருந்தால், அவன், அவளுடைய பொருத்தனையை அனுமதிக்கலாம், அல்லது தள்ளிவிடலாம், திருமணத் திற்கு முன்பு செய்யப்பட்ட பொருத்தனையானாலும் இது பொருந்தும்.

**31:1-54 .பேயோரைத் தண்டித்தல்;-** ஐந்து ராஜாக்களும் பொய்த் தீர்க்கதரிசியும்.பேயோரில் நடந்த காரியங்களுக்காக மீதியானியரைப் பழிவாங்கும்படி மோசேக்கு கர்த்தர் கூறினார். (25:16-18). ஒவ்வொரு கோத்திரத்திலுமிருந்து 1000 யுத்தவீரர்களை தெரிவு செய்தார் .இஸ்ரவேலர்கள் மீதியானியர்களைத் தேற்றடித்து, அந்த ஐந்து ராஜாக்களையும் கொலை செய்தார்கள். அவர்கள் கள்ளத் தீர்க்கதரிசியாகிய பிலேயாமையும் கொலை செய்தார்கள். பேயோரின் சங்கதியிலே பிலேயாமின் ஆலோசனையினால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணக் காரணமாயிருந்தவர்கள் இவர்கள் தானே; அதினால் கர்த்தரின் சபையிலேவாதையும் நேரிட்டதே. ஆகையால் குழந்தைகளில் எல்லா ஆண்பிள்ளைகளையும், புருஷ சம்யோகத்தை அறிந்த எல்லா ஸ்திரீகளையும் கொன்றுபோடுங்கள். ஸ்திரீகளில் புருஷ சம்யோகத்தை அறியாத எல்லாப்பெண்பிள்ளைகளையும் உங்களுக்காக உயிரோடே வையுங்கள். அக்கினிக்கு நிற்கத்தக்கவைகளாகிய பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, தகரம், ஈயம் ஆகிய இவைக ளெல்லாம் சுத்தமாகும்படிக்கு, அவைகளைஅக்கினியிலேபோட்டெடுக்கக்கடவீர்கள்; தீட்டுக் கழிக்கும் தண்ணீராலும் அவைகள் சுத்திகரிக்கப்படவேண்டும்; அக்கினிக்கு நிற்கத்தகாத வைகளையெல்லாம் தண்ணீரினால் சுத்தம்பண்ணக்கடவீர்கள் கொள்ளையிடப்பட்டதை இரண்டு பங்காகப்பங்கிட்டு, யுத்தத்திற்குப் படையெடுத்துப் போனவர்களுக்கும் சபையனைத் திற்கும் கொடுங்கள். மீதியானியர்களுடனான இந்த யுத்தத்தில் இஸ்ரவேலர்களுக்கு ஒரு உயிரிழப்பும் நேரிடவில்லை.

**32:1-42 "நீங்கள் மேற்கை வெற்றிகொள்ள உதவினால் கிழக்கை வைத்துக் கொள்ளலாம்".** ரூபன் புத்திரருக்கும் காத் புத்திரருக்கும் ஆடு மாடுகள் மிகவும் திரளாயிருந்தது; அவர்கள் யாசேர் தேசத்தையும் கீலேயாத் தேசத்தையும் பார்த்தபோது, அது ஆடுமாடுகளுக்குகதந்த இடமென்றுகண்டார்கள். அவர்கள் இந்தப் பகுதிகளை மேற்குப் பகுதிகளுக்குப் பதிலாகத் தங்களுக்குச் சுதந்திரமாகத் தரும்படி கேட்டுக் கொண்டார்கள்.கானானை வெற்றி கொள்வ தற்கு, மற்றக் கோத்திரத்தாருக்கு ஒத்துழைக்காமல் இருக்க முனைகிறார்கள் என்ற காரண த்தினால் இவர்கள் மீது மோசே கோபங் கொண்டார். ஆனால் ரூபன் புத்திரரும், காத் புத்திரரும் தாங்கள் நிச்சயமாக போரில் பங்குபற்றுவோம் என்று உறுதி வழங்கினார்கள். கானானை

வெற்றி கொண்டு முடியும் வரை இந்தப் பூமிக்குத் திரும்பக் கூடாது என்ற எச்சரிப்புடன் அவர்கள் யுத்தத்தில் ஈடுபட்டார்கள். மனாசே கோத்திரத்தின் அரைப்பகுதியினரும் ரூபன் கோத்திரத்தாரும், காத் கோத்திரத்தாரும் கிழக்கு யோர்தான் பகுதியைப் பெற்றுக் கொண் டார்கள்(32:33).

**33:1-49 .பிரயாணத்தைப் பற்றியதான கையேடு.** மோசே இஸ்ரவேலர்களுடைய இந்தப்பிரயாணம் குறித்ததும்,முகாமிடுதல் குறித்ததும் , எகிப்திலுள்ள ராமேசை விட்டு மோவாபின் சமவெளியில் தங்கிருக்கும் காலம் வரைக்கான சம்பவக் குறிப்புக்களைத் தொகுத்து சிறு ஏடாகவைத்துள்ளார்.

**33:50-56 ."அழி, அல்லது அழிக்கப்படுவீர்கள்.".** நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் யோர்தானைக்கடந்து, கானான் தேசத்தில்போய்ச் சேரும் போது, அத் தேசத்துக்குடிகளை யெல்லாம்உங்களுக்கு முன்பாகத்துரத்திவிட்டு, அவர்களுடைய எல்லாச் சிலைகளையும் வார்ப்பிக்கப்பட்ட அவர்களுடைய எல்லாவிக்கிரகங்களையும் அழித்து, அவர்கள் மேடைகளையெல்லாம் நிர்மூலமாக்கி, தேசத்திலுள்ளவர்களைத் துரத்திவிட்டு, அதிலே குடியிரு க்கக் கடவீர்கள்; அந்தத் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அதைஉங்களுக்குக் கொடுத் தேன்.சீட்டுப்போட்டு, தேசத்தை உங்கள் குடும்பங்களுக்குச் சுதந்தரங்களாகப்பங்கிட்டு, அதிக ஜனங்களுக்கு அதிக சுதந்தரமும், கொஞ்சஜனங்களுக்குக் கொஞ்சச்சுதந்தரமும் கொடுக்கக் கடவீர்கள்; அவரவர்க்குச் சீட்டு விழும் இடம் எதுவோ, அவ்விடம் அவரவர்க்கு உரியதாகும்; உங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களின்படியே சுதந்தரம் பெற்றுக் கொள்ளக்கடவீர்கள். நீங்கள் தேசத்தின் குடிகளை உங்களுக்கு முன்பாகத் துரத்தி விடாமலிருப்பீர்களானால், அப்பொழுது அவர்களில் நீங்கள் மீதியாகவைக்கிறவர்கள் உங்கள் கண்களில் முள்ளுகளும் உங்கள் விலாக்களிலே கூர்களுமாயிருந்து, நீங்கள் குடியிருக்கிற தேசத்திலே உங்களை உபத்திரவப்படுத்துவார்கள். அன்றியும், நான்அவர்களுக்குச் செய்யநினைத்ததை உங்களுக்குச் செய்வேன் என்று சொல் என்றார். இஸ்ரவேலர்கள் பாகால் **சிலைகளை அழிப்பதல் தவறுவிட்டார்கள். சில ராஜாக்கள் சிலைகளை அகற்றத் தவறிவிட்டார்கள்.(1 ராஜா3:2-4; 15:14; 2 ராஜா 12:3).**

**34:1–35:8 . கானானில் ஒவ்வொரு கோத்திரத்தாருக்கும் ஒதுக்கப்பட்ட பகுதிகள்.** மேற்குப்பகுதிக்கு 91/2 கோத்திரங்களைக் கத்தர் எல்லைகளைக் குறித்துக் கொடுத்தார் யோத்தானின் கிழக்குப்பகுதியில், ***ரூபன், காத், மனாசேயின் ½ பகுதியினர்*** ஏற்கனவே குடியிருப்பதை மோசே ஞாபகப்படுத்தினார்.யோசுவாவும், எலியேசரும் நிலம்பங்கீடு செய்வதை மேற்பார்வை செய்தார்கள், அவர்களுக்கு உதவியாக ஒவ்வொரு கோத்திரத்திலும் ஒருத்தர் உதவிசெய்தார்கள். லேவியர்களுக்கு 48 நகரங்களும் அதனைச்சுற்றி மேய்ச்சல் தரைகளும் கொடுக்கப்பட்டன. (35:1-8).

**35:9-34 அடைக்கலப்பட்டணங்கள்.** இஸ்ரவேலர்கள் ஆறு நகரங்களை அடைக்கலப் பட்ட ணங்களாக்கினார்கள். கைப்பிசகாய் ஒருவனைக் கொன்று போட்டவன் ஓடிப்போயிருக்கத்தக்க அடைக்கலப்பட்டணங்களாகச் சில பட்டணங்களைக் குறிக்கக்கடவீர்கள். திட்டமிட்டு ஒருவனைக் கொலை செய்துவிட்டு, அடைக்கலப் பட்டணங்களில் ஒன்றுக்கு ஓடிவருபவன், கொலை செய்யப்படக்கடவன்.முன்பே திட்டமிடாமல், சடுதியாக ஏற்பட்ட கோபத்தில் ஒருவனைக் கொலைசெய்திருந்தால், சபையார், இது எப்படிப்பட்ட கொலை என்பதைக் கண்டறிய வேண்டும். ஒரு கொலை உறுதிப்படுத்தப்படுவதற்கு இரண்டு சாட்சிகள் அவசியம்

தேவை. (35:30). பிரதான ஆசாரியன் சாகும் வரையில் அடைக்கலப்பட்டணத்திற்குள் சென்றவன் தங்கியிருக்க வேண்டும்.

36:1-12 .**மீண்டும் ஐந்து கன்னிகைகள்.**! கானான் தேசத்தில் செலோப்பியாத்தின் குமாரத்திகள் தங்கள் தகப்பனுடைய பங்கை மோசே அவர்களுக்கு வழங்கியிருந்தார். (27:1-11).தற்போது, சில கோத்திரத்தின் மூப்பர்கள், மோசேயிடம் சில கேள்விகளைத் தொடுக்கின்றார்கள், அதாவது இந்தப் பெண்கள் தங்கள் கோத்திரமல்லாதவர்களைத் திருமணம் செய்தால், அவர்களுடைய பங்குகளின் நிலை என்னவாகும் என்றார்கள். அந்தக் கோத்திரங்களுக்கு அந்தச் சொத்துக்கள் சென்றடையுமா என்றார்கள். மோசே இதற்குப் பதிலாக அந்த ஐந்து கன்னியர்களும் அதே கோத்திரத்திற்குள் திருமணம் செய்யத் தவறும் பட்சத்தில் அவர்கள் சுதந்திரம் இல்லாது போகும் என்றார். அவர்கள் தங்கள் கோரத்திற்குள்ளேயே திருமணம் முடித்தார்கள்

36:13 எரிகோவின் அருகே யோர்தானுக்கு இப்புறத்திலுள்ள மோவாபின் சமனான வெளிகளில் கர்த்தர் மோசேயைக் கொண்டு இஸ்ரவேல்புத்திரருக்கு விதித்தகட்டளைகளும் நியாயங்களும் இவைகளே. (22:1; 26:3; 33:50; 35:1).

**நன்றி கர்த்தாவே**
**திராணி**

உசாத்துணை நூல்கள்.

**THE BIBLE READER'S COMPANION** *By* **Lawrence O. Richards VICTOR BOOKS A Division of Scripture Press Publications Inc. USA Canada England**

**WILLMINGTON'S BIBLE HANDBOOK** *by* **Harold L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**

**WILLMINGTON'S GUIDE TO THE BIBLE** *by* **Dr. H. L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**

**PARSONS BIBLE PICTURES PARSONS TECHNOLOGY, INC. Cedar Rapids, Iowa**